எண்ணெய் இருக்கிறதா என்று ரஷிய வல்லுனர் உதவியோடு ஆய்வு நடத்தப்பட்டது. காரைக்கால் பகுதி, கொள்ளிட முகத்துவாரப் பகுதி, பாம்பனுக்கு வடக்குப் பகுதி ஆகியவற்றில் எண்ணெய் இருப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. பட்டுக்கோட்டை, திருப்பூண்டி, கந்தர்வக்கோட்டை, திட்டச்சேரி, நிரவி, நாகை ஆகிய பகுதிகளில் கிணறுகள் தோண்டப்பட்டு ஆராயப்பட்டு வருகின்றன.

இக்குழுவிடமிருந்து கேட்ட மேற்கொண்ட விவரங்கள் இன்னும் வரவில்லை. எண்ணெய், இயற்கை வாயு ஆணைக்குழுவிடமிருந்து இந்த விவரங்கள் வரப்பெற்றதும் அவை சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்படும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, சமீபத்தில் காரைக்கால் பகுதியில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அது தரமுள்ள எண்ணெய் என்றும் பத்திரிகையில் செய்தி வந்ததே. அது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அது பற்றிய செய்தியை நானும் செய்தித்தாளில்தான் பார்த்தேன். அது பற்றிய முழு விவரமும் நமக்கு வரவில்லை. தனிக்கேள்வி கேட்டால் தக்க விவரமறிந்து கூறப்படும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : பட்டுக்கோட்டைப் பகுதியில் எண்ணெய்க் கிணறு ஒன்றைப் பரவலாக வெட்டப்பட்டதாக செய்தி வந்தது. அது மறுபடியும் கைவிடப்பட்டதாக அறிகிறேன். அதற்கு எவ்வளவு உத்தேசமாக செலவு செய்யப்பட்டது ? அது என் மறுபடியும் கைவிடப்பட்டது. ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டைப்பகுதியில் இரண்டு மூன்று இடங்களில் தோண்டப்பட்டது. 1,963 மீட்டர் தோண்டப்பட்டும் அங்கே எண்ணெய்க்கான அறிகுறி தென்படவில்லை. திருப்பூண்டியில் 1,141 மீட்டர் தோண்டியும் எண்ணெய் கிடைப்பதற்கான வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. கந்தர்வக்கோட்டையில் 1,000 மீட்டர் தோண்டியும் எண்ணெய் கிடைப்பதற்கான அறிகுறி இல்லை. திட்டச்சேரியில் 1,770 மீட்டர் தோண்டிய பிறகு எண்ணெய் கிடைப்பதற்கான அறிகுறி தோன்றுகிறது. நிரவியில் 1,704 மீட்டர் தோண்டியும் இது வரையில் எண்ணெய்க்கான அறிகுறி தென்படவில்லை. காரைக்கால் பகுதியில் 3,147 மீட்டர் தோண்டப்பட்டதில் எண்ணெய்க்கான அறிகுறி காணவில்லை. நாகைக்கு அருகில் 2,826 மீட்டர் தோண்டிக்கொண்டிருக்கிறார்கள். அது பற்றிய முழு விவரம் தெரியவில்லை. இருக்கிற சில இடங்களில் கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன. எண்ணெய் இருக்கக்கூடும் என்று தோன்றுகிறதே தவிர வியாபாரம் செய்வதற்கான அளவிற்கு இருப்பதாகத் தெரியவில்லை. அது பற்றிய முழு விவரக் குறிப்பு கிடைக்கவில்லை. விவரம் வந்தவுடன் சபையில் வைக்கப்படும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், காரைக்கால் பகுதியில் எண்ணெய்க் கிணறு தோண்டப்பட்டதன் விவரம் செய்தித்தாளில்தான் பார்த்ததாகச் சொன்னார்கள். அந்த விவரங்களை சம்பந்தப்பட்டவர்கள் அவ்வப்போது அரசுக்குத் தெரிவிப்பார்களா ? இல்லையா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மாநில அரசு துறையினருக்கு அதில் தொடர்பு உண்டு. கேட்பதன் மூலமாக அதன் நடவடிக்கைகளை அறிந்து எடுத்துச் சொல்லும் வாய்ப்பு உண்டு.

Centre's aid for Tamil Development

*111 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state —

(a) the funds allotted by the Central Government annually for Tamil Development from 15th August 1947 till date ; and

(b) how the amount was spent ?

தமிழ் வளர்ச்சிக்கு மத்திய உதவி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1947 ஆகஸ்ட் 15ம் தேதி முதல் இன்றுவரை தமிழ் வளர்ச்சிக்கு மத்திய சர்க்கார் ஆண்டுதோறும் கொடுத்த நிதி எவ்வளவு ?

(இ) அவை எப்படி செலவு செய்யப்பட்டன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) and (இ) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கீழைத்தேசச் சுவடிகள் நூலகத்தின் (Oriental Manuscripts Library) சில கையெழுத்துப் பிரதிகளை அச்சிட இந்திய அரசு இவ்வரசிற்கு உதவித் தொகையாக ரூ. 33,800 அளித்துள்ளது. அதன் பிறகு தமிழ் வளர்ச்சிக்கென்று தமிழக அரசிற்கு இந்திய அரசு தனியாக நிதியுதவி செய்யவில்லை. தமிழக அரசின் பரிந்துரையின் மீது சில தனியார் நிறுவனங்களுக்கு இந்திய அரசு நிதியுதவி அளித்துள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, தமிழில் கலைக் களஞ்சியம் வெளியிட்டார்களே, அதற்கு மத்திய சர்க்கார் உதவி செய்தார்களா ? தமிழக சர்க்கார் உதவி செய்தார்களா ? எவ்வளவு ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தமிழக அரசு, தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு சிறுவர் கலைக் களஞ்சியம் வெளியிட ரூ. 50,000 அரசாங்கத்தின் சார்பாக தனி நிறுவனம் என்ற முறையில் வழங்கியிருக்கிறார்கள். தமிழ் கலைக் களஞ்சியம் முதல் பிற்சேர்க்கைக்கு ரூ. 46,500 வழங்கியிருக்கிறார்கள். கல்வெட்டுகளை ஆராய்தல், பொருள் விளக்கம் காணல், தமிழில் அவற்றை வெளியிடுதல் ஆகியவற்றிற்காக ரூ. 35,000 வழங்கியிருக்கிறார்கள். தென்மொழிகள் புத்தக நிறுவனத்திற்கு தென்னிந்திய மொழிகளில் சிறந்த நூல்களை வெளியிடுவதற்காக ரூ. 1,85,000 வழங்கப்பட்டது. சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் திருநெல்வேலிக்கு சங்க இலக்கியங்கள் எல்லாவற்றிற்கும் தெளிவான உரை வெளியிடுவதற்காக ரூ. 23,400 அளிக்கப்பட்டது. " வள்ளுவர் 20-ம் நூற்றாண்டு தமிழ் " முதல் பத்து தொகுதிகளை வெளியிடுவதற்காக ரூ. 10,000-ம் " வள்ளுவர் 20-ம் நூற்றாண்டு தமிழ் " அச்சிடுவதற்காக ரூ.5,500-ம் திருவாசகம், திருக்குறள், நாலடியார் முதலிய நூல்களுக்கு உரை வெளியிடுவதற்காக ரூ. 24,000-ம், திருவாசகத்தின் தெளிவான உரையை அச்சிடுவதற்காக ரூ. 5,000-ம் வழங்கப்பட்டன.

THIRU D. SANTOSHAM : May I know, Sir, whether any money has been set apart for translating law reports into Tamil ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அதற்கான விவரக் குறிப்பு இல்லை. பொதுவாக கல்வி அமைச்சர் மகாநாட்டில் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்திய கல்வி அமைச்சர் கொடுப்பதற்கிணங்கினார். தமிழ் மொழிபெயர்ப்புக்கும் கொடுப்பார்கள். இந்திய அரசு ஒரு கோடி ரூபாய் தருமென்று வாக்களித்திருக்கிறார்கள். அது எதிர்பார்க்கப்படுகிறது. அது வந்தபிறகு யோசிக்கப்படும். சட்ட நூல்களுக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்ற விவரக் குறிப்பு இல்லை.